# கடி விஷ மருத்துவம்

ஆசிரியர்:

வைத்திய ரத்ன எஸ். சிதம்பரதாணு பிள்ளை

சித்தமகுட பிரசுரம்

சென்னை-30.

# கடிவிஷ மருத்துவம்

ஆசிரியர்:

வைத்திய ரத்ந. **எஸ். சிதம்பரதாணு பிள்ளை**
பி.ஏ., பி.காம்., எல்.எல்.பி., எம்.ஐ.பி.எஸ். (லண்டன்)

©

பதிப்புரிமை பெற்றது

**சித்தமகுட பிரசுரம்**

33/6, கஜபதி நாயுடு தெரு,

**ஷெணய் நகர் : : சென்னை-600030**

கித்த மகுட பிரசுர வெளியீடு எண் 31

முதல் பதிப்பு மே 1974
**இரண்டாம் பதிப்பு ஜூலை 1976**

உரிமையாளர் :

ஆசிரியர்

விலை **ரூ. 2-00**

## எமது இதர வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| உட்கூறுபாடு விளக்கம் | ... | ரூ. 7-00 |
| சித்தர் குறுநூல் | ... | ரூ. 6-00 |
| மாதர் மருத்துவம் | ... | ரூ. 6-00 |
| மனித மர்மச் சாவை கண்டு பிடிப்பது எப்படி ? | ... | ரூ. 6-00 |
| கொங்கையின் இரகசியம் | ... | ரூ. 4-00 |
| நீர் பாய்ச்சல் நோயும் மருந்தும் | ... | ரூ. 2-00 |
| விக்கல் நோயும் மருந்தும் | ... | ரூ. 1-00 |

# முகவுரை

இப்புவியில் வாழும் உயிரினங்களுக்கு அதிபதியாக வாழுபவன் மனிதன். மனிதன் சாதுவான உயிரினங்களை நண்பனுகவும், கொடூரமானவற்றை அப்புறப்படுத்தியும் வாழ்க்கையை சீரமைத்துக் கொண்டான். இருந்தும், சில நேரங்களில், இவ்வுயிரினங்கள் தம் உடற்கூறின் மாற்றத்தாலும், சினத்தின் சீற்றத்தாலும், பயத்தின் வேகத்தாலும் மனிதனை கடித்துவிடுவதுண்டு. அதன் விளைவால் ஏற்படும் நச்சால் மனிதன் துயரடைவதோடு, சில சந்தர்ப்பங்களில் உயிருக்கு ஊறு விளைவதும் உண்டு. எனவே, விஷ கடிகளில் இருந்து மனிதனை காப்பாற்றவேண்டிய தேவை ஏற்படுகின்றது.

இத் தேவையைப் பூர்த்திச் செய்ய விஷகடி மருத்துவம் என்ற இந்தச் சிறிய புத்தகத்தை படைக்கலானேன். மனிதரை தீண்டும் பல்வேறு நச்சுத்தன்மை வாய்ந்த உயிரினங்களைபற்றிய விபரங்கள், அவைகள் கடித்துவிட்டால் ஏற்படும் விளைவுகள், மேற்கொள்ளவேண்டிய சிகிச்சை முறைகள், மருந்துகள் இவைகளை விளக்குகின்றேன். இவைகளை ஒவ்வொருவரும் தெரிந்திருப்பது தேவைமாத்திரமன்று—அறிவுடமையும் கூட.

இப் புத்தகத்தில் தந்துள்ள பெரும்பான்மையான மருந்துகள் எங்கள் குடும்பத்தில் பல தலைமுறை தலைமுறையாக கையாண்டு, பல நண்பர்களின் துயரை துடைத்த அனுபவ நிவாரணிகளாகும்.

சித்த மருத்துவம் சிலரிடம் மாத்திரம் சிக்கி மங்கிவிடாது, பலரிடம் பரவி பாரிலுள்ளோருக்கு நிரந்தர பயன் ஏற்பட இப்படைப்பை வெளியிடுகின்றேன்.

இந்நூலை உருவாக்க, அருள்கூர்ந்த என் பெரிய தந்தை அமரர். சித்த மகுடம் ! ஆ. சுப்பிரமணியப் பிள்ளையவர்கட்கு என் இதயபூர்வ அஞ்சலி நல்கி, இதனை உங்கள் திருகரங்களுக்கு வழங்குகின்றேன்.

*ஆசிரியர்*

# பொருளடக்கம்


| | | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | பாம்பு கடிக்கு | 1 |
| 2. | தேள் கடிக்கு | 5 |
| 3. | பூரான் கடிக்கு | 8 |
| 4. | நட்டுவக்காலி கடிக்கு | 9 |
| 5. | பல்லிக் கடிக்கு | 11 |
| 6. | அரணைக் கடிக்கு | 11 |
| 7. | குரங்கு கடிக்கு | 12 |
| 8. | குதிரை கடிக்கு | 13 |
| 9. | பூனைக் கடிக்கு | 13 |
| 10. | கீரிக் கடிக்கு | 14 |
| 11. | எலிக் கடிக்கு | 14 |
| 12. | பெருச்சாளிக் கடிக்கு | 16 |
| 13. | செய்யான் கடிக்கு | 16 |
| 14. | அட்டை கடிக்கு | 17 |
| 15. | காட்டெறும்பு கடிக்கு | 18 |
| 16. | கம்பளிப்பூச்சி கடிக்கு | 18 |
| 17. | தவளைக் கடிக்கு | 19 |
| 18. | மீன் கடிக்கு | 20 |
| 19. | சிலந்தி கடிக்கு | 20 |
| 20. | நண்டுக் கடிக்கு | 21 |
| 21. | வண்டு கடிக்கு | 22 |
| 22. | குளவி கடிக்கு | 23 |
| 23. | ஈ கடிக்கு | 23 |
| 24. | காட்டுக்கொசு கடிக்கு | 24 |
| 25. | நாய் கடிக்கு | 24 |
| 26, | மனித கடிக்கு | 24 |
| 27. | கல், முள், கம்பு குத்தினால் | 25 |
| 28. | காணுக் கடிக்கு | 25 |
| 29. | கடிவிஷம் முறிய | 26 |
| 30. | கடிவிஷங்களுக்கு பொதுமருந்து | 26 |
| 31. | சில் விஷங்கள் தரிப்புக்கு புகை | 26 |
| 32. | மயக்கமுற்ற விஷங்களுக்கு நசியம் | 26 |



# கடி விஷ மருத்துவம்

## 1. பாம்பு கடிக்கு

குளிர் பிரதேசங்களில் வாழும் பாம்பைவிட, இந்தியா, ஆப்பிரிக்காப் போன்ற உஷ்ண பிரதேசங்களில் காணும் பாம்புக்கு நச்சுத் தன்மை அதிகமாகும்.

''பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்!'' என்ற பழமொழிக்குரிய காரணம் இருக்கத்தான் செய்கிறது. கொடிய விஷத்தைக் கொண்ட பாம்பு கடித்து விட்டால் மீள்வது மிக அரிது. உயிரின் மீது ஆசை கொண்ட மனிதன் பயமுறுவதில் ஆச்சரியமில்லையல்லவா?

விஷத்தின் தன்மையை ஆதாரமாய்க் கொண்டு, விஷப் பாம்புகளை 'நல்லபாம்பு வகை', வீரியன் வகையென இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு வகையிலும் எண்ணற்ற பிரிவு பாம்புகள் காணப்படுகின்றன. அவற்றைப் பற்றி விரிவுற எழுத இச்சிறிய படைப்பு இடந் தராது.

நல்ல பாம்பு;—இது கடித்தால் நஞ்சு நரம்புகளில் ஏறிப் பரவும். இதனுல் கடித்த இடத்தில் எரிவும், திமிரும் உண்டாகும். குமட்டல், நடை தளர்தல், மயக்கம், பேச்சு குழறல், மதி மயக்கம், மூச்சுத்திணறல், மூக்கிலும், வாயிலு

மிருந்து நுரை சாடுதல் போன்ற குறிகள் காணப்படும். அரைமணி நேரத்துக்குள் மரணமும் ஏற்படலாம்.

விரியன்:—இதுகடித்தால், கடிபட்ட இடத்தில் எரிவும், இரத்தப் பாய்ச்சலும், வீக்கமும், நீலநிறம் பாவித்தலும் ஏற்படும். மூக்கிலிருந்தும், வாயிலிருந்தும் இரத்தம் வடியும்; மூத்திரத்தில் இரத்தம் கலந்து போகும்; இருதயத் துடிப்புக் குறையும்; கண்கள் சொருகும்.

பாம்பு கடிப்பட்ட நோயாளிக்கு, உடன் சிகிச்சை வழங்குதல் நன்று.

பாம்பைக் கண்டவுடன், பயத்தால் பாம்பு கடியாவிட்டாலும் மயங்கி விடுவார். எனவே, முதலில் பாம்பு கடித்தவரா, கடியாதவரா என்று நிச்சயப்படுத்தல் வேண்டும். கடித்த பாம்பைக் காணல்: கடிபட்ட இடத்தில் பாம்பின் பற்கள் பதிந்திருந்தல்; எரிவு எடுத்தல் போன்ற அறிகுறிகளால் நிச்சயப்படுத்தலாம்.

பாம்புக் கடிபட்டவரின் வாயில் நல்ல மிளகைப் போட்டு சுவைக்கக் கூறவும், காரம் தோன்ருதிருந்தால், உடலில் விஷம் ஏறி இருக்கிறது என்பதைத் தீர்மானிக்கலாம்.

சிகிச்சை:—பாம்புக் கடிபட்டவருக்கு முதற் சிகிச்சையாக, கடிபட்ட இடத்திலிருந்து இரண்டொரு அங்குலம் மேலாக ஒரு கயிருல் கட்டுபோடவும். (கை, அல்லது கால் இவைகட்கு மாத்திரமே கட்டுபோடயியலும்). இதனுல், இரத்த ஓட்டம் தடையாகும். விஷம் பரவாமல் இருக்கச் செய்ய முடியும்.

கடிபட்டவரின் உடலில் பாம்பு கடித்த கடிவாயைச் சோதிக்கவும். பாம்பின் ஒரு பல் பட்டிருந்தால் 'கால்கடி' யாகும். தோலைப் பற்றி விஷம் ஏறும். கடிவாயில் பனிநீர்

போல் திவலைகள் காணும் இரண்டு பல் பட்டிருந்தால், 'அரைக்கடி' என்பதை அறியவும். விஷம் தசையைப்பற்றி ஏறும். மஞ்சள் நீர் போன்ற திராவகம் வெளிப்படும். மூன்று பல் பட்டிருந்தால் 'முக்கால் கடியாகும்'. முள் தைத்தது போன்று வேதனை எடுக்கும். விஷம் எலும்பைப் பற்றி ஏறும். நான்கு பல் பட்டிருந்தால், இது முழுக்கடி. விஷம் விறுவிறுப்போடு மூளையைப்பற்றி ஏறும். கடிபட்டவர் மூர்ச்சையடைவார். கடிபட்ட நோயாளியிடம் புத்திசாலித் தனமாக பரிமாற வேண்டும். விஷத்தின் கொடுமையைப் பற்றியோ, கடியால் ஏற்படும் பயங்கரத்தை வெளியில் கூறவோ கூடாது. அனுபவமுடைய விஷ மருத்துவரிடம் கடிபட்ட வரை எடுத்துச் சென்றோ, மருத்துவரை அழைத்து வந்தோ, காலம் பிரளாது தேவையான மருத்துவம் செய்யவும்.

உணவு வகையில் சில கட்டுப்பாடுகளை நோயாளி அனுசரிக்க வேண்டும் உப்பு, புளி, நல்லெண்ணெய், கடுகு போன்றவைகளை நீக்குதல் உத்தமம், உடலிலிருந்து விஷம் நீங்குகின்ற வரை, நோயாளி இரவு பகல் தூக்கத்தை நீத்தல் வேண்டும்.

பாசிப்பயிறும் அரிசியும் கலந்து ஆக்கிய கஞ்சியை நோயாளிக்கு ஊட்டவும்.

## மருந்து

(i) பாம்பு கடித்து விட்டால், வாழை மரத்தை வெட்டிப் பட்டை பட்டையாகக் கீறி சாறு பிழிந்து கால் லிட்டர் அளவு நோயாளிக்குப் பருகக்கொடுக்கவும். இது ஒரு சஞ்சீவி மருந்து.

(ii) வேப்பெண்ணெய்யை பதினைந்து மில்லி லிட்டர் கொடுத்தாலும், விஷத்தின் வல்லமையை முறிக்கலாம்.

(iii) பாம்பு கடித்து மயங்கினுல், விஷமானது உடலில் ஏறி விட்டதுயென நிச்சயப்படுத்தவும். இதற்கு, வெற்றிலையைக் கசக்கி சாறு பிழிந்து, மயக்க முற்றேரின் முகத்தில் விடவும். மாறும்.

(iv) துளசி தளிரான இலை, தும்பையிலை, மிளகு, வசம்பு, உள்ளி, முலைப்பால், கெந்தகம் இவைகளைச் சிறிதளவு எடுத்துப் பொடிப்பனவற்றைப் பொடித்துக் கலந்து நாசியில் சிறிது ஏற்ற விஷத்தின் பாதிப்பு மாறும்.

(v) கழச்சியிலை, சிறுதும்பை, கருந்துளசி, மாவிலங்கு, முதிர்ந்த வேப்பிலை, முடக்கொத்தான், பொடுதலை இந்த ஏழு வகை மூலிகைகளையும் சமனுய் எடுத்து வந்து, சிறுநீர் விட்டு நன்ருய் அரைத்து, சுடுநீரில் கலக்கி, வெதுப்பி விஷங்களை கொண்ட கடிவாயில் பூச, விஷம் நீங்கும்.

(vi) எருக்கலை செடியின் தளிரிலையும், பூவும், வேரும் சமனளவு எடுத்து நன்ருய் அரைத்து புன்னக்காயளவு சிறுநீரில் கலக்கி பாம்புக்கடி பட்டவருக்கு பருகத் தரவும். பத்தியம் நன்கு காக்க வேண்டும். நஞ்சின் வேகம் தணிந்து நீங்கும்.

(vii) சாரணை வேர், ஆடுதீண்டாப்பாளை, புங்கன்வேர். குறிஞ்சான், துளசி, சுக்கு, முல்லை இவைகளைச் சமனிடை எடுத்து வந்து, இடித்து, குப்பைமேனிச் சாற்றில் அரைத்து கடிவாயிலும், உடம்பிலும் பூசவும். இதனுல் நஞ்சு நீங்கும்.

(viii) கீழ்காய் நெல்லியிலை, துளசியிலை, முருக்கின் இலை இவைகளைச் சமனுய் எடுத்து வந்து ஒன்ருய் அரைத்து கடிபட்ட இடத்தில் பூசிவர உடலில் தாவிய விஷம் நீங்கும்.

*கவனிப்பு:*—பாம்பு கடிபட்ட நோயாளி மயக்கமாய் இருந்தால் அவரின் கண் இமைகளைத் திறந்து பார்வை

யிடவும். கண்விழி மேலே சொருகி இருந்தால் உயிரானது மேலடங்கி இருக்கிறது எனவும்; கண்விழி கீழ் நோக்கி இருந்தால் உயி ர கீழடங்கி இருக்கிறது எனவும்; கண்கள் விழித்த படியே எதிர்நோக்கி இருந்தால் (இமை சிமிட்டாதிருந்தால்) உயிர் பிரிந்தது என நிச்சயப்படுத்தவும். பாம்பு கடிபட்டவன் இறந்து விட்டான் எனத் திடீரென முடிவு செய்யக் கூடாது. பல உயிர் சோதனை செய்து பார்த்த பின்னரே எதையும் தீர்மானிக்க வேண்டும்.

கடிபட்டவரின் தலைமயிரைப் பிடித்து இழுத்தால் வலியின் காரணமாக உடல் அசைவுற்றாலும், பிரம்பால் நோயாளியின் உடலில் அடிக்க தடித்தாலும் அல்லது சிவந்தாலும், குளிர்ந்த நீரை உடலில் வாரி இறைக்க ரோமங்கள் சிலிர்த்தாலும், கால் கை விரல்களில் நெட்டு எடுக்க ஓசை கேட்டாலும், உயிர் அடங்கி இருக்கிறது என்று நிச்சயப் படுத்தவும்.

குறிப்பு:—கொடிய பாம்பு விஷத்தின் பாதிப்பால் இறந்தவரை ஒரு சில நாழிகைகளுக்குப் பிறகு தகனம் செய்ய எத்தனித்தல் விரும்பத்தக்கது.

## ௨. தேள் கடிக்கு

தேள் வெப்பமான பிரதேசங்களில் அதிகமாகக் காணும் ஒரு விஷ ஜந்து. தேளில், வெண்தேள், செந்தேள், குள்ளத் தேள், சித்திரத்தேள், சிறுதேள், சந்தித்தேள் 'கருந்தேள், வயல்தேள், மரத்தேள் யெனப் பல பிரிவுகள் இருக்கின்றன. சாதாரணமாய், வீடுகளில் காணப்படும் தேள் மஞ்சள், கறுப்பு, சிவப்பு நிறங்கள் கலந்தது. சந்து பொந்துகளிலும், ஓலை வேயப்பட்ட கூரைகளிலும் அதிகமாய்ச் சஞ்சரிக்கும். கோடை காலங்களில் வெப்பம் தாங்காது, கூரையிலிருந்து வெளி கிளம்பும்.

தேளின் மீது நம் உடலின் எந்த பாகமேனும் பட்டால் அது கொட்டிவிடும். வாயின் நுனியிலுள்ள வளைந்து கொக்கி போன்ற முள்ளால், நம் உறுப்பைத் தாக்கும், தோலில் காணும் நுண்ணிய துவாரம் வழியாக இது விஷத்தை நமது உடலுக்குள் செலுத்துகிறது.

விஷத்தின் தன்மை:—தேள் கடிபட்டவர், தரிப்பால் மிகவும் வேதனையுறுவார். கண்விழிகளில் தரிப்புண்டாகி, கண்ணீர் பெருகும். நெருப்பினல் சுட்டதுபோல் உணர்வு எழும். நேரம் போகப்போக விஷத்தின் அகோரம் உச்சம் பெற்று புலம்புவர்; உடலில் அசதி ஏற்பட்டு, வாயில் நுரை தள்ளும்.

''தேளது தீண்டிற்ருனல் திகைத்திடத்தரிப்பு மீறி
மாளுவது போலே சீவன் மருண்டிடு மயக்கமாகும்
தாளவே விழி யிரண்டில் தரித்திடா நீரும்பாயும்
சூழவே காந்தல் போலே சுற்றிலும் எரிச்சலாமே',

இவ்வாருக தேளின் விஷம் கொண்டோரின் தன்மையைச் சித்தர் பாடலொன்றில் காண்கிரேும்.

சிகிச்சை:—தேள் கொட்டிய இடத்தை அசைக்காமல் வைத்திருந்தால் விஷம் விரைவாய் உடலில் பரவாது. கொட்டிய இடம் கை அல்லது காலானல் உடனே கடிபட்ட இடத்திலிருந்து சுமார் இரண்டு அங்குலம் தள்ளி கயிற்ருல் கெட்டியாய் ஒரு சட்டுப் போடவும். இதனல், கடிவிஷம் இருதயத்தை நோக்கி ஓடும் இரத்தத்தில் கலக்கயியலாது தடைப்படுத்தலாம்.

தேள் கடித்த இடத்தை துடைத்தால், கடிவாயிலிருந்து நீர் கசிந்து வரும். இந்த இடத்தில், தடிப்பு, கடுப்பு காணும். இதற்குத் தகுந்த மருந்தைத் தர வேண்டும்.

மருந்து

(i) தேளது தீண்டிக் கண்ணீர்
தேம்பியேவந்த பேர்க்கு
மீளவே வெள்ள வுள்ளி
மெத்தென சதைத்துச் சாறு
ஆளதின் பிலங்கண் டூட் டி
அவர் நாசிவிழிகள் தன்னில்
நாளது துளிரெண் டூற்ற
நாடிடாதோடுந் தானே.

நாலைந்து பூண்டை எடுத்து வந்து சதைத்துச் சாறு எடுத்து நோயாளியின் உடல் பலத்தையும், வயதின் அளவையும் கண்டு தேறி உள்ளுக்கு ஊட்டவும். மேலும் அவரின் மூக்கில் இரண்டொரு துளி பூண்டுசாறு விடவும். இதனுல் விஷத்தின் ஆதிக்கம் அகலும். இது அனுபவமான மருந்து.

(ii) எள்ளெண்ணெய் ஒரு கரண்டி எடுத்து, தேள் கொட்டிய வாயில் துளி துளியாக விடவும், பத்து நிமிடங்கள் கழிந்தபின் அந்த இடத்தைத் துடைக்கவும். விஷத்தின் பாதிப்பு மாறும்.

(iii) பொட்டிலுப்பை சிறுநீரிலோ, குழந்தையின் மூத்திரத்திலோ, சுடுநீரிலோ கரைத்து, அனலேற்றி, தேள் கொட்டிய கடிவாயில் போடவும். விஷத்தின் ஆக்கிரமிப்பு தடைபடும், இம்மருந்தின் பண்பைக் கீழே காணும் சித்தர் பாடிய பாட்டில் பார்ப்போம்.

(iv) வெற்றிலை, மிளகு, இவை இரண்டும் சிறிதளவு எடுத்து வந்து உமிழ்நீரில் அரைத்து, தேள் கடித்த இடத்தில் தேய்க்க விஷம் நீங்கும்.

(v) சிறியா நங்கை செடியின் இலைகளை கொய்து வந்து, சாறு எடுத்து, கடிவாயில் தடவினுல் விஷத்தின் வீராப்பு மாறும்.

(vi) பூனை வணங்கிச் செடியின் இலைகளை கொய்து வந்து இடித்து ஆழாக்குச் சாறு பிழிந்து ஒரு பரந்த பாத்திரத்தில் வைத்து அதில் சிறிதளவு பொட்டிலுப்பைக் கரைத்து, அடுப்பேற்றி கொதிப்பித்து, தேள் கடித்த இடத்தில் பூசவும். விசம் நீங்கும்; திமிர் ஏற்பட்டாலும் மாறும், இதன் நயத்தைப் பாடலில் பார்ப்போம்.

(vii) குமட்டிச் .செடியின் வேரைக் கொண்டு வந்து சிறுநீரிலோ காய்ந்த நீரிலோ நன்ருய் அரைத்து, மேல் பூச்சிடவும். தேள் கடித்தவரின் உடல் பெலம் வயது இவைகளை நிர்மாணித்து, அளவோடு உள்ளுக்கும் ஊட்டவும். விசத்தின் பாதிப்பு அகலும், கைகண்ட மருந்தாகும்.

## 3. பூரான் கடிக்கு

பூரானை நூறுகால் பூச்சி என்று நர்மவரில் பலர் கூறுவர் இதன் தலையில் உணர்வு இழையும், வாயின் பக்கத்திற்கு ஒன்ருக இரண்டு கொக்கி பற்களும் இருக்கும்.

பூரான் கடித்தது, உடன் தெரிய வராது. உடம்பில் அப்பம் போல் வீக்கம் எழுவதைக் கண்டோ, தசையின் இழுப்பை உணர்ந்தோ, இதனை நிச்சயப்படுத்துகிருேம். இக்கடி விசத்தைச் சிலர் உதாசீனமாக விட்டுவிடுவர் இப்படி விடுதல் நல்லதல்ல. சில பூரான் கடியால், பிந்திய நாட்களில் தொல்லைகள் எழும். குறிப்பாக அம்மாவாசை, பவர்ணமி நாட்களில் கடிபட்ட இடங்களில் அரிப்பு, எரிச்சல் எழும் இதனுல், சொறிந்து எழும்பிய தடிப்பால் தொல்லைகள் உண்டாகும்.

பூரான் கடித்தவரை உடனுக்குடன் தக்கச் சிகிச்சைச் செய்யுமிடத்து, பிறகுவரும் தொல்லைகளுக்குஇடங்கொடாது உடலைக்காக்கலாம்.

கடிபட்ட இடத்தில் மண்ணெண்ணெயை ஊற்றி தடித்த இடத்தை அழுத்தித் தேய்க்கவும்,

மருந்து

(i) பூரான் கடித்து விட்டால், அதன் விஷம் உடலில் ஏறும். இந்தப் பாதிப்பை மாற்ற, நெல்லிக்காய் அளவு பழம் புளியை எடுத்து, 100 மி. லிட்டர் சுத்தத் தண்ணீரில் நன்ருய் கலக்கி சக்கையை அகற்றிடவும். இக்கலவையில் 35 மி, லிட்டர் எள்ளெண்ணெயை ஊற்றிக் கலக்கவும். இதனை பூரான் கடித்தவருக்கு, குடிக்க கொடுக்கவும். கலவையின் அளவு, ஆளின் வயது, உடலின் தன்மை முதலியவை கண்டு தீர்மானப்படுத்தவும்; இதில் சிறிதளவு எடுத்து சூடாக்கி, பூரான் கடித்த கடிவாயில் தொட்டுப் போடவும். சுகமுண்டாம்.

(ii) ஐந்து பூண்டு கொண்டு வந்து, சதைத்து சாறெடுக்கவும். இதில் முப்பது மி. லிட்டர் எள்ளெண்ணெயைக் கலந்து உள்ளுக்கு ஊட்டவும். பூரானின் விஷம் அகலும்.

(iii) குப்பைமேனி இலையும், உப்பும் வகைக்கு 150 மி. கிராம், 100 மி, கி. மஞ்சள் பொடியும் கலந்து, உடம்பெங் கும்பூசவும். ஒரு மணி நேரம் கழிந்து தண்ணீரில் குளிக்கவும். மூன்று நாட்கள் இவ்விதம் குளித்துவர பூரான் கடியால் ஏற்பட்ட தடிப்பு மாறும்.

## 4. நட்டுவக்காலி கடிக்கு

தேளின் இனத்தைச் சார்ந்த நட்டுவக்காலி, தேளை காட்டிலும் சிறிது பருமனுயும், கருப்பு நிறமாயும் இருக்கும். இதனைக் காண்பதுவும் அரிது. இது கடிப்பதும் அரிது.

நட்டுவக்காலியில் பல பிரிவுகள் உண்டு. கருநட்டு வக்காலி, மிருகர்த்தி நட்டுவாக்காலி, பெருங் காற்சம் மிதை நட்டுவாக்கலி என்று பலவகைப்படும்.

நட்டுவக்காலி, மனிதரைக் கடிக்கும்போது, தனது கொடுக்குகளால் மனித உறுப்பைப் பிடித்து, வால்பாகத்தை வளைத்து வசமாகக் கொட்டும். கடிவிஷம் உடலில் கலந்தால், வீக்கம், காந்தல். கடுப்பு, குமுறல், குடைச்சல், தரிப்பு, வியர்வை, சோர்வு இவைகளால் மனிதர் துயருறுவர். சிலவேளை, கடிபட்டவர் வாயிலிருந்து நுரை தள்ளும்; மயக்கம் ஏற்படும்; கொட்டிய இடம் விங்கிப் புண் உண்டாகும்.

## மருந்து

முதற் சிகிச்சையாக நட்டுவக்காலி கடித்தவர்க்கு தேங்காயைத் தின்னக் கொடுக்கவும். இதனுல் விஷம் பரவுவது தடைப்படும். அடுத்து, வேண்டிய மருந்தைத் தரலாம்,

(i) கத்திரிக்காயை இரண்டாக வெட்டி தீக்கனலிலிட்டு சுட்டெடுக்கவும். தாங்கும் சூட்டில், இதை நட்டுவக்காலி கடித்த இடத்தில் வைத்துக் கட்டவும். இதனுல் விஷம் அகலும்.

(ii) இன்னும், எட்டிச் செடியின் வேரைப் பிடிங்கி வந்து, அதன் பட்டையை உரித்தெடுத்து நெல்லிக்காயளவு அரைத்து சூடுநீரில் கலக்கி, கடிபட்டவருக்கு ஊட்டவும்.

(iii) பெரும் செருப்படி யெனும் பச்சிலையை கைப்பிடியளவுபறித்துவந்து அதில் பன்னிரண்டு நல்லமிளகு, நான்கு பால் பூண்டும் கூட்டி மைபோல் அரைத்து கடிபட்டவரிடம் விழுங்கச் கொடுக்கவும். விஷம் விட்டோடும்.

(iv) அவரை வேர், காஞ்சிரை வேர் இவைகளைச் சமனளவு எடுத்துத் தூள் செய்து ஐந்து கிராம் அளவு வீதம் சாப்பிட்டு நீர் குடிக்கவும். விஷம் நீங்கும்.

## 5. பல்லிக்கடிக்கு

பூச்சி, புழுவகைகளை ஆகாரமாய்ப் பிடித்துத் தின்று வாழும் பல்லியை வீடுகளில் சாதாரணமாய்க் காணலாம். நாம் தூங்கும் போது பல்லி படுக்கைப் பக்கத்தில் ஊர்ந்துச் செல்லும். தூங்குவோரின் கை அல்லது அதன்மீது படுமிடத்து பல்லி கடித்துவிடும். மேலும், தொந்தரவு கொடுத்தால், பயத்தின் காரணமாக மாத்திரமே, மனிதரைக் கடிக்கும். பல்லிக் கடியால் வீக்கம், எரிச்சல், உடலில் வியர்வை, ஆயாசம், மார்புவலி போன்ற குணங்கள் எழும். இன்னும் கடித்த இடத்தில் பொடியரிசி போல் சிரங்கு எழும்பும்.

மருந்து

(i) பெருங்கரத்தை வேர்; குதிரைச் செ்ன்மரத்தின் வேர் வகைக்கு 70 மில்லிகிராம், பாவைஇலைச் சாறு, பசுவின் பால் வகைக்கு 70 மி. லிட்டர் சேர்த்து, அரைத்து கடிவாயிலும், சரீரத்திலும், பூசி இரண்டு மணிநேரம் கழிந்து குளிக்கவும். குணமுண்டாம்.

(ii) மிளகுப்பொடி அறுபது மி. கிராம் எடுத்து அதில் இருநூறு மி. லிட்டர் அகத்தியிலைச் சாற்றைக் கலந்து சாப்பிட்டு வர பல்லிக்கடி விஷம் நீங்கும்.

## 6. அரணைக் கடிக்கு

அரணை கடிப்பது அரிது. யாதாவது காரணத்தால், அரணை மனிதரை கடிந்து விட்டால், அக்கடி அதிக விஷமுடையது. எவ்வளவுக்கு எவ்வளவு ஊனம் பட்டிருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு விஷம் உடலில் ஏறும் என்பது அனுபவப்பூர்வமாய் கண்டதாகும். அரணை கடித்தால் அல்லது நக்கினுல் உடன்வேண்டிய சிகிச்சை பெறல் உத்தமம். உடலில் விஷம் பரவினுல், கடிபட்டவரின் வாயிலிருந்து நுரை நுரையாக வெளிவரும். கடிபட்டவரின் உடல் நடுங்கும்;

நாக்கு தடிக்கும். பேச இயலாது, நாக்கு குளறுவர். அரணை வால் சிலபோது முறிந்துவிழுவதுண்டு, இது ஆகாரத்தில் விழுந்தால், கொடிய விஷமாகும்.

மருந்து

(i) சாரணைச் செடியின் வேர் இருபது மி, கிராம் எடுத்து வந்து, துளசிச்சாறு விட்டு அரைத்து பசுவின் பாலில் கலந்துப் பருகவேண்டும். விஷம் நீங்கும்.

(ii) அழிஞ்சியின் வேர் உள்பட்டையை உரித்து வந்து சுத்தி செய்து எடுக்கவும், அதை சிறுநீர் விட்டு அரைத்து கலக்கி, சூடேற்றி, அரணைக் கடிபட்ட இடத்தில் தப்பளமிட வும். விஷம் விலகும்.

## 7. குரங்கு கடிக்கு

குரங்கை உபத்திரவித்தால் மனிதரைக் கடிக்கும். இது அபூர்வமாய் நடக்கிற சங்கதியாகும். கடிவாயிலிருந்து இரத்தம் வரும்; கடுப்பு, எரிச்சல், வீக்கம் காணும்; குரங்கு கடித்தவர் அஜாக்கிரதையாய் இருந்துவிட்டால், பிறகு அதிக இன்னலை விளைவிக்கும், எனவே, உடன் சிகிச்சைப் பெறல் உத்தமம். கடித்த விஷம், உச்சமாய் இருக்குமிடத்து மனிதன் கூச்சலிடுவான், குரங்கைப் போல் ஆடிப்பாடி, தாவித்தாவிக் குதிப்பான்.

மருந்து

(i) அவுரி வேர், நன்னாரி வகைக்குப் பதினைந்து மி. கிராம் எடுத்து அரைத்து, பசும்பாலில் கரைத்து உள்ளுக்கு ஊட்டவும்,

(ii) இஞ்சிச்சாறு முப்பது மி. லிட்டர் நாளொன்றுக்கு மூன்று வேளை வீதம், இரண்டு நாட்கள் கொடுத்துவர, குரங்கு கடிவிஷம் மாறும்,

(iii) கொழிஞ்சிச் செடியின் வேரும், சுக்கும் சிறிதளவு எடுத்து சூடுநீரில் அரைத்து கடிவாயில் பூசவும்,

(iv) மேலும், வீளியிலேச் சாற்றில், சிறிது மிளகுப் பொடி கலந்து வெயிலில் வைத்து, மேலாக எழும் நுரை வற்றி வரும் போது எடுத்து, கடிவாயில் பூசவும்.

(v) சிறு குறிஞ்சான் பூ, இலவம் வேர், நிலப்பனே இலே,

தை வேளேயிலே, சுக்கு இவைகளேச் சரி நிறையாய் எடுத்து சட்டியிலிட்டு வறுத்து, கிழியாகக் கட்டி கடிபட்ட இடத்தில் ஒத்தடம் கொடுக்கவும். விஷம் நீங்கும்;

## 8. குதிரைக் கடிக்கு

குதிரைகளில் சில அபூர்வமாய் மனிதரைக் கடித்து விடுவதுண்டு, இதனுல், வீக்கம், வலி, சுடுப்பு, வேதனே முதலியன எழும். தக்க சிகிச்சை உடன் பெருவிடில், நாளடைவில் தலேவலி, காய்ச்சல், குளிர் முதலியன உண்டாவதோடு, சில வேளே குதிரை போல் பல்லிளித்தல், கனேத்தல், கைகால் அசைவு போன்றவைகள் காணும்.

மருந்து

(i) அமுக்கிராக் கிழங்கு எழுபது மி. கிராம் சூரணித்து தினம் காலே மாலே இருவேளே சிட்டிகை வீதம் சுத்தமான தேனில் குழைத்துக் கொடுக்கவும். சில நாட்கள் உப்பு, புளி, நல்லெண்ணெய் நீக்கி விடவும்.

(ii) அவுரி வேரை அரைத்து கடிபட்ட இடத்தில் பூச, விஷத்தின் பாதிப்பு அகலும்.

## 9. பூனே கடிக்கு

பூனேயைத் தொந்தரவு செய்தாலோ, பசியின் காரணத்தால் கோபமுற்ருலோ, மனிதரைக் கடித்துவிடும். கடியின் காரணமாக ஆயாசம், மயக்கம், காய்ச்சல் போன்றவைகள் எழும். சிலபேர், பூனேயைப் போல் சப்தமிட்டு, சீற்றம் கொள்ளுவர். தக்கதாய சிகிச்சை தருவது உத்தமம். கவனக் குறைவாய் இருந்து விட்டால், இருமல், காசம், ஈளே போன்ற பல நோய்கள் உதயமாகும்.

மருந்து

(i) கொல்லங்கோவை கிழங்கு பத்து மி. கிராம், எடுத்து துளசிச்சாற்றில் அரைத்து வெந்நீரில் கலந்து பூனைக்கடிபட்டவருக்கு உள்ளுக்குத் தரவும்.

இக்கிழங்கை அரைத்து கடிவாயில் வைத்துக் கட்டவும்.

(ii) அவரி வேர் பட்டையைச் சுடுநீரில் அரைத்து கடி வாயிலும், சரீரத்திலும் பத்து நாட்கள் தடவிவர விஷத்தின் பாதிப்பு மாறும்.

(iii) ஆமணக்குச் செடியின் வேர், கடுக்காய், இந்திப்பு, திப்பிலி, சவுக்காரம் இவை ஐந்தும் சமநிறையாய் எடுத்து, தேன்விட்டு மைபோல் அரைக்கவும். இதில், சிறிதளவு மூன்று தினம் உண்டு வர, விஷத்தின் சூரம் நீங்கும்.

## 10. கீரிக் கடிக்கு

கீரி அதிகமாகவும் காடுகளிலும், புதர்களிலும் வசிக்கும் ஒரு பிராணி. சுமார், அணிலைப் போன்ற தோற்றமுடையது. கீரியை தொந்தரவு செய்தாலோ, தன் பயத்தாலோ மனிதரைக் கடிப்பதுண்டு. இதன் விஷம் கொடியதாகும்,

மருந்து

அவரிச் செடியின் வேரைப் பிடுங்கி, நன்றாய்ச் சுத்தம் செய்து, வேரின் மேல் பட்டையை உரித்து வைக்கவும். இதைச் சிறுநீரில் அரைத்து, தேசிக்காயளவு எடுக்கவும். பிறகு நீரில் கலக்கி மூன்று வேளை நோயாளிக்கு ஊட்டவும்.

இனிமேல், மேல் பூச்சு மருந்தைப் பார்ப்போம். புகையறையும் (அடுக்களையில் படிந்துள்ள புகைக் கறையும்) சுண்ணும்பும் சமனாய் எடுத்துவந்து சிறுநீரில் அரைத்துக் கலக்கி கொதிப்பித்து கடிவாயில் பூச விஷம் அகலும்.

## 11. எலிக் கடிக்கு

உலகெங்கிலும் காணும் உயிர்ப் பிராணிகளில் எலியும் ஒன்று. எலிகளில், புங்கன், உத்தமன், புரந்தரி, அருணன்,

குலமந்திரி, சுண்டெலி, பாண்டு மந்திரி, விருங்கன், புண்டரகன், அரா, கடைப்பல்லன், பன்றி, மூர்க்கன், செங்கோடன், கருவா வெலி, சதங்கை, வாயெலி, அட்டை மூஷிகம், செந்தலை யெலி, அரணை வாலெலி என்ற முக்கிய இனங்கள் உண்டு.

பொதுவாக, எலி கடிக்கில், இருமல், இரைப்பு கோழை, வாந்தி போன்ற குறிகள் காணலாம்.

### மருந்து

(i) எலிக்கடிக்கு பொது மருந்தொன்று கூறுகிறேன். நீலக் காக்கணம் வேரை சிறிய கொட்டைப் பாக்களவு அரைத்து ஏழுநாட்கள் காலையில் உள்ளுக்குக் கொடுத்துவர எலிக்கடி விஷம் தீரும்.

(ii) அழிஞ்சி வேர்ப்பட்டையை புன்னக்காய் பிரமாணம் சூடுநீரில் அரைத்து எட்டு நாட்கள் காலையில் உள்ளுக் கூட்ட விஷம் தீரும்.

(iii) வீட்டில் வாசம் செய்யும் வீட்டெலி மனிதரைக் கடித்துவிட்டால், குப்பைமேனி இலையைக் கொண்டு வந்து சுமார் 120 மி. லிட்டர் அளவு சாறு பிழிந்து, அதில் 40 மி. லிட்டர் அளவு சுத்தமான நல்லெண்ணெயை ஊற்றிக் கலக்கி, கடிவிஷம் கொண்டவருக்கு ஊட்டவும். இவ்விதம் தினம் மூன்று வேளை மூன்று நாட்கள் தொடர்ந்து ஊட்டவும். பத்தியமாய், மீன், உடல் சேர்க்கை, உப்பு போன்றவைகளைச் சில நாட்கள் நீக்கல் உத்தமம்.

(iv) ஆதளை சமூகத்தை பசுவின் பால் விட்டு அரைத்து' எலுமிச்சம் பழப் பிரமாணம் பசுவின்பாலில் கலக்கி காலையில் மட்டும் பருகச் செய்யவும். இவ்வாறாக நான்கு நாட்கள் தொடர்ந்து பருகவும்.

(v) கருவேலம் பட்டையை ஒரு லிட்டர் தண்ணீரில் கசாயமிட்டு, 200 மி. லிட்டராக குறுக்கி இறக்கவும். இதை நோயாளிக்கு உள்ளுக்குக் கொடுக்கவும்; இவ்விதமாக மூன்று நாட்கள் தரவும். இதனால், எலிக்கடியின் விஷம் அகலும்.

## 12. பெருச்சாளிக் கடிக்கு

பெருச்சாளி, வீடுகளில் வளை தோண்டி, பகலில் வளையில் தங்கும். இரவு வந்ததும், இரை தேடி வெளியில் வரும்.

பெருச்சாளி கடித்தால், உடன் சிகிச்சை அளித்தல் நல்லது. கடியால், ஆத்துமா, ஈளை, இழுப்பு போன்ற வியாதிகள் உற்பத்தியாகின்றன.

மருந்து

(i) பாவட்டைத் தழை, பட்டை இவைகளையும், அழிஞ்சிப்பட்டையும், சித்திரமூலம், வேர் பட்டையையும் சமனளவு கொண்டுவந்து, வெள்ளாட்டின் பாலில் அரைத்து, கழற்சிப் பிரமாணம் காலை மாலை சாப்பிடக் கொடுக்கவும் இக்கலவையைக் கடிபட்ட இடத்திலும், உடம்பிலும் பூச விஷத்தின் பாதிப்பு அகலும்.

(ii) இறங்கழிஞ்சிப் பட்டையை ஒரு கொட்டைப் பாக்குப் பிரமாணம் வென்னீரில் கலக்கி, மூன்று நாள் காலையில் கொடுக்க விஷம் தீரும்.

மேற்படி மருந்தினுல் வாந்தி கண்டால், சுக்கு, மிளகு, வசம்பு கரி இவைகள் வகைக்கு ஐந்து மி. கிராம், முருங்கையீர்க்கு ஒரு பிடி. இவைகளைச் சிதைத்து 500 மி. லிட்டர் தண்ணீரில் போட்டு 125 மி. லிட்டராய் வற்ற வைத்துக் கொடுக்க வாந்தி போம்.

## 13. செய்யான் கடிக்கு

செய்யானில் பல பிரிவுகள் உண்டு. வெள்ளரைச் செய்யான், பெரும்படைச் செய்யான், குருதிச் செய்யான், பட்டைச் செய்யான், மருட்சிச் செய்யான், வன்மீகச் செய்யான் போன்றவைகள் முக்கிய இனங்களாகும்.

செய்யான் மனிதரைக் கடிப்பதுண்டு. இதனால், கடுப்பு கைகால் உளைவு, கண் சிவப்பேறுதல், உடலில் சுரம் காய்தல், கடிபட்ட இடம் வீங்குதல் போன்ற குறி குணங்கள் உண்டாகும்.

மருந்து

(i) கோவையிலை, தாளிப்பூ, அரிசிச்சோறு இவைகளைக் காடி நீரிலரைத்து நெய்யில் கலந்து கடிவாயில் மூன்று நாட்கள் பூசவும். இது அவிந்தபின், இலைக் கள்ளியைச் சிதைத்து வாட்டி பெயறுக்கும் சூட்டில் வைத்துக் கட்டவும். நஞ்சு நீங்கும்.

(ii) எரிச்சலை எழுப்பும் கடி என்றால், கோவையிலை, வெற்றிலை, பருத்தியிலை, கொழுஞ்சியிலை, முடக்கற்றான் இலை, உத்தாமணி இலை இவைகளைச் சரிநிறையாகக் கொண்டு வந்து இடித்துப் பிழிந்து சாறெடுக்கவும். பிறகு இக் கலவையை கொதிப்பித்து இறக்கி, தாங்கும் சூட்டில் கடி வாய்ப்பட்ட இடத்திலும், உடலெங்கிலும் பூசவும். இதனால் விஷம் இறங்கி விடும்.

(iii) எல்லா வகைப்பட்ட செய்யான் கடிக்கும் பொது மருந்தொன்றையும் கூறுகிறேன். அப்பிரகபற்பத்தைக் கையாந்தகரை யிலைச்சாற்றில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கலாம். இம்மருந்தைச் சாப்பிடும் நோயாளி நிச்சயம் பத்தியம் காக்க வேண்டும்.

## 14. அட்டை கடிக்கு

அட்டைகளில் பல ரகங்கள் உண்டு அவைகளில் ஒரு சில விஷத்தன்மை கொண்டவை. மரவட்டை, காட்டு மரவட்டை, பெருமரவட்டை, செம்மரவட்டை, வெண் மரவட்டை என்று பலசாதிகளைக் குறிப்பாகக்கூறலாம்.

அட்டை கடித்து விட்டால், உடலில் தடிப்பு, வியர்வை, பொடிப்பொடியான சிரங்குகள், வேதனை போன்றவைகள் எழும்.

மருந்து

(i) திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) சூரணம் வைத்துக் கொடுக்கவும்.

(ii) காட்டு வாகை வேர், பட்டை, இலை; பூ, காய் இவைகளைக் கொண்டு வந்து, வென்னீர் விட்டு அரைத்து, கடிபட்ட இடத்தில் பூசவும். வென்னீரில் அரைத்ததை வடி கட்டி இறுத்து உள்ளுக்கும் கொடுக்கலாம்.

(iii) கடிபட்ட இடத்தில் சுண்ணாம்பு சிறிது பூசவும். இதனால், அட்டைக்கடி விஷம் அகலும். எவ்வித வகையை சார்ந்த அட்டை கடித்தாலும் இதை ஒரு சஞ்சீவி மருந்தாக உபயோகிக்கலாம்.

(iv) தண்ணீர் விட்டான் கிழங்குசாறு முப்பது மி. லிட்டர் அளவு வீதம் காலை மாலை உள்ளுக்கு ஊட்டவும் இங்ஙனம் மூன்று நாட்கள் செய்யவும். கடி விஷம் அகலும்.

## 15. காட்டெறும்புக் கடிக்கு

மலை எறும்பு கடித்த இடத்தில் எழும் வேதனையானது, தீயால் சுட்டால் எழும் நோவைப்போன்று தோன்றும். தடிப்பும் உண்டாகும்.

### மருந்து

குப்பை மேனியுடன் கொஞ்சம் மஞ்சள் பொடி சேர்த்து கடிபட்ட இடத்தில் பூச, குணம் ஏற்படும்.

## 16. கம்பளிப்பூச்சி கடிக்கு

கம்பளிப்பூச்சிகள் இரண்டு பிரிவு உண்டு. சாம்பல் நிறமுடைய கம்பளிப்பூச்சி, கறுப்புநிற முடைய கம்பளிப் பூச்சி. இரண்டாவது கூறியது கொடிய விஷம் படைத்த தாகும்.

சாம்பல் நிறைமுடைய கம்பளிப்பூச்சி கடித்தால் வீக்கம், கடிவாயில் வலி, கொப்பளம், தரிப்பு, ஆயாசம், வாந்தி எடுத்தல் போன்றவைகள் எழும்.

மருந்து

குப்பை மேனிச் சாற்றில் சிறிதளவு உப்பும், மஞ்சள் பொடியும் சேர்த்து நமைச்சல் ஏற்பட்ட இடத்தில் பூசினல் விஷம் போகும்.

## 17. தவளைக் கடிக்கு

தவளையில் பல ரகமுண்டு. அவை நாட்டுத் தவளை, காட்டுத்தவளை, சொறித்தவளையென முக்கிய மூன்று பிரிவுகளுண்டு.

தவளைக் கடியால், சோம்பல், தூக்கம், மூர்ச்சை, தினவு, கறுத்துப் பரவும் சொறி இவைகள் உண்டாகும்.

மருந்து

(i) ஒட்டடை, உப்பு, உத்தாமணி வேர் இவைகள் வகைக்கு சமஅளவு எடுத்து, சிறுநீரால் அரைத்துக் குழம்பாக எடுத்து கடிவாயிலும், உடலிலும் பூசி, இண்டு மணி நேரம் கழிந்து குளிக்கவும். இதனை, தொடர்ந்து ஏழு நாட்கள் செய்யவும் இதனுல் குணமுண்டாகும்.

(ii) சித்திர மூலம், வெள்ளைக் காக்கணம், நீலி, அவுரி இவைகளின் வேர்களை சமனுக எடுத்து வந்து, உலர்த்திப் பொடி செய்து, சிட்டிகை வீதம் சுடுநீரில் கலந்து பருகவும். விஷத்தின் பாதிப்பு அகலும். உப்புப்புளி அகற்றி பத்தியம் காக்கவும்.

மேலே கூறிய மருந்து, பொதுவாக எல்லாத் தவளைக் கடிக்கும் உபயோகிக்கலாம்.

(iii) காட்டுத் தவளை கடித்துவிட்டால் அதற்குரிய மருந்தைப் பார்வையிடுவோம். சுத்தமான பசுவின் நெய் நூற்றைம்பது மி. லிட்டரில், மிளகுப்பொடி பத்து கிராம் எடுத்து, இலேகியம்போல் செய்து பரணியில் பத்திரப்படுத்தவும். இதனை ஒரு உண்டை அளவு தினமும் இரவு வேளை சாப்பிடவும். இவ்வாறு இருபது நாட்கள் இம் மருந்தைச் சாப்பிட, காட்டுத் தவளை கடியின் பாதிப்பிலிருந்து விடுபடலாம்.

## 18. மீன் கடிக்கு

மீன்களில் சில கடிப்பதுண்டு. மீன் கடிவிஷம், மனித உடலில் பரவ, நோவு, வீக்கம், எரிச்சல் முதலியன உண்டாகும். சில வேளை நுரைத்த பேதி, தடிப்பு போன்ற குணங்களும் காணும்.

மருந்து

(i) பச்சை நன்னாரி வேரை மேல் தோலையும், நரம்பையும் அகற்றி, நன்றாய் அரைத்து கொட்டைப் பாக்கு பிரமாணம் எடுக்கவும். இதில் சிறிதளவு கற்றாழைச் சோற்றையும் சேர்த்து சில நாட்கள் உட்கொள்ள மீன் விஷத்தின் கூரத்தனம் மாறும். இச்சாப்பத்தியம் காக்கவும் (உப்பு, புளி, போகம், மீன் போன்றவைகளை நீக்கல் வேண்டும்.)

(ii) குளத்துத் தேள் மனிதரைக் கொட்டிவிடும். இதனால் அதன் கூரிய முள்ளின் விடம் உடம்பில் ஏறும். முள் தைத்த பாகம் வீக்கமுறும். சங்குபுஷ்பத்தின் வேரை எடுத்து வந்து நன்றாய் அரைத்து வீக்கமுற்ற இடத்தில் பூசவும். வீக்கம், தரிப்பு இவைகள் நீங்கும்.

(iii) நஞ்சறுத்தான், அழிஞ்சியின் வேர் இவைகளை சிறு நீரில் மைபோல் அரைத்து, கொதுப்பித்து, தேளி கொட்டிய இடத்தில் பூசினால், வீக்கம், உளைச்சல், வேதனை முதலியன மாயும். (தேளி ... ஒருவித மீன்)

## 19. சிலந்தி கடிக்கு

சிலந்தி இருபத்தி எட்டு வகைப்படும். எட்டுக்கால் பூச்சி வகையைச்சார்ந்தது சிலந்தி. சிலந்தியைத் தொந்தரவு செய்தால் கடிக்கும். சாதாரணமாய் அது படுக்கையில் நம்மை அறியாது வரும்போது, நம்முடல் பட்டால் கடித்துவிடும்.

சிலந்தி விஷத்தின் தன்மையைப் பார்ப்போம்.

சிலந்தி மூச்சுவிடுவதால் ஏற்படும் விஷம், சுரம், தாகம் இவைகளை உண்டுபண்ணும்.

சிலந்தியின் வாய்பட்ட இடத்தில் புண் ஏற்படும்.

சிலந்தியின் வாய் நீர்பட்டால் தினவு உண்டாகும்.

சிலந்தியின் பல் பட்டால், விரணம் ஏற்படும்.

சிலந்தியின் மலம் பட்டால் துர்நாற்றம், எரிச்சல் எழும்.

சிலந்தியின் மூத்திரம் பட்டால் புண் ஏற்படும். அதிலிருந்து எரிச்சலும், துர்நாற்றமும் உண்டாகும்.

பரிசம் (ஊறு) பட்டால் முன்கூறிய குணங்கள் அதிகமாகவும் உண்டாகும்.

சிலந்திப் பூச்சியின் விஷம் உடலில் ஏறியபின் நாட்கள் செல்லச் செல்ல, விஷப் பாதிப்பு அதிகரிக்கும். எனவே, உடனுக்குடன் மருத்துவம் செய்யத் துணிதல் உத்தமம்.

### மருந்து

(i) சுண்ணும்பு, பழம்புளி, இவ்விரண்டையும் சரி நிறையாய்ச் சேர்த்து கடிவாயில்—தினவுகண்ட இடத்தில் தேய்க்க விஷம் அகலும்.

(ii) பிராய வேரும், நீலி வேரும் சரிநிறை எடுத்துவந்து பசுவின் பாலில் அரைத்துக் கலக்கி, காலையில் குடிக்கத் தரவும். இதுபோல் மூன்று நாட்கள் குடிக்கவும்.

(iii) குப்பை மேனி, முருங்கு, எட்டி, தைவேளை இவைகளின் இலை சாற்றைச் சரிநிறையாக எடுத்துச் சேர்த்து உடம்பில் போட்டுவரச் சுகமுண்டாகும்.

(iv) அவுரி, உத்தாமணி, குப்பைமேனி இவைகளின் இலை வகைக்கு கொஞ்சம் கொய்துவந்து, பாக்களவு அரைத்து, பசுவின் மோரில் கலக்கிக் குடிக்க விஷம் நீங்கும். இச்சாப் பத்தியம் அனுசரிக்கவும்.

## ௨0. நண்டுகடிக்கு

நீர்த் தேக்கங்களில் வளைசெய்து வாழும் உயிரினம் நண்டு. வயல் வாய்க்கால்களில் இதனை அதிகமாகக் காணலாம். இவைகளைத் தொந்தரவு செய்தால் தற்காப்புக்காக மனிதரின் உடலுறுப்பை, தன் கொடுக்கையில் கடிக்கும். இதனுல் தரிப்பும், வீக்கமும் எழும்.

மருந்து

பொட்டிலுப்பை, தண்ணீர் விட்டுக் குழைத்து கடிவாய்ப் பட்ட இடத்தில் பூசவும். சிறு தீக்கனலால் சூடுபிடிக்க, விஷம் நீங்கும். யாதாவது புண்ணுனல் நல்லெண்ணெய் தொட்டு இட்டுவர, புண் குணப்படும்.

## 21. வண்டு கடிக்கு

வண்டுகளில் எண்ணிறைந்த வகைகள் உண்டு. மா வண்டு, சிதள் வண்டு, சொறி வண்டு, சுழல் வண்டு, பாசி வண்டு, நீர் வண்டு என்பவை முக்கிய இனமாகும். இவைகளில் சில விஷங்கள் கொண்டவை.

வண்டு கடிக்குமிடத்து, சில முக்கிய பொது குறிகளை காணலாம். இக் கடியால் வண்டின் விஷம் உடம்பிலுள்ள இரத்தத்தில் கலந்துவிடும். எனவே, உடலில் வீக்கம், ஊரல், வட்ட வடிவ தடிப்புகள், வேதனை, தரிப்பு, நுரைத்த பேதி போன்ற குணங்கள் காட்டும்.

மருந்து

(i) வண்டுக் கொல்லி என்ற மூலிகையைக் கொண்டு வந்து நெல்லிக்காயளவு அரைத்துக் கொடுக்கவும். இவ்விதம், எட்டு நாட்கள் தர, வண்டுகடி விஷத்தின் தன்மை தீரும்.

(ii) வெள்ளாட்டுப் பால் 100 மி. லிட்டர் எடுத்து அதற்கு சரியாக புளித்த மோர் சேர்த்துக் கலக்கி பன்னிரண்டு நாட்கள் பருக குணமுண்டாகும்.

(iii) ஆடு தீண்டாப் பாளையின் வேரைப் பிடுங்கி வந்து, சுத்தி செய்து, நன்ருக அரைத்து சுண்டைக்காய் பிரமாணம் 200 மி. லிட்டர் பசுவின் மோரில் கலந்து சாப்பிடவும். ஒரு வாரம் மட்டும் இவ்விதம் குடித்துவர, வண்டு கடியின் வீராப்பு மாயும்.

மேற்படி மருந்துகளை உட்கொள்ளும்போது, உப்பு, புளி அகற்றி பத்தியம் காக்கவும்-நன்று.

## ௨௨. குளவிகடிக்கு

குளவி உடலில் கொட்டினுல், வீக்கம், எரிச்சல், தடிப்பு போன்றவைகள் உண்டாகும். கடிபட்ட இடத்தில் நோவுண்டாகி சிலே நீர் வடியும்.

மருந்து

வேலிப் பருத்தி இலேச்சாறும், குறிஞ்சான் சாறும் சேர்த்து குளவி கொட்டிய இடத்தில் பூசவும். நலமேற் படும்.

## ௨௩. ஈ கடிக்கு

ஈக்களில், ஈக்கன், காரீ, பேரீ, மாட்டீ, பசுமை ஈ, காட்டீ, நாயீ யெனப் பல ரகங்கள் உண்டு. காட்டீயைத் தவிர மற்றைய ஈ வகைகள் கடித்தால் தடிப்பும், தினவும், எரிச்சலும் எழும். காட்டீ கடித்தால் தூக்கம், மூர்ச்சை இவைகள் உண்டாகும்.

முக்கியமாய் தேனீ கடி விஷத்தை அறியற்பாலது. தேனீ கொட்டினுல், அதன் முள், உள்ளேயும், தசைகளில் விஷப்பை தைத்தும் இருக்கும். கொட்டிய இடத்தை தேய்த் தால் விஷம் உடம்பில் உட்புகுந்து அதிக சிரமத்தை உண்டு பண்ணும்.

கத்தியால் முல்லேக் கிள்ளி எடுப்பதால், முள் நீங்கப் பெற்று, விஷம் உள்ளே புகாது செய்துவிடலாம்.

மருந்து

(i) வெங்காயத்தை இரண்டாக வெட்டி, வெட்டுப் பாகத்தை கடிபட்ட இடத்தில் வைக்க விஷத்தின் பாதிப்பு நீங்கும்.

(ii) தேனீ கொட்டி கடுப்பு அதிகப்பட்டால், சிறிதளவு மண்ணெண்ணெயைக் கடிபட்ட பாதத்தில் போட்டுத் தேய்த்துவிட்டால், கடுப்பு நீங்குவதோடு, விஷத்தின் அகோரம் அடங்கிவிடும்.

## 24. காட்டுக்கொசு கடிக்கு

காட்டு கொசு கடித்தால், உடம்பில் நமைச்சல், தடிப்பு, வேதனை போன்றவைகள் எழும்.

மருந்து

அவரியிலைச் சாறும், அவரிவேர்குடிநீரும் இதற்கு மருந்தாக உபயோகிக்கவும்.

காட்டுக் கொசுக்கடி சில வேளை அசாத்தியமாகவும் மாறலாம். எனவே உடன் தக்க மருத்துவம் செய்யவும்.

## 25. நாய் கடிக்கு

நாய் கடித்திட்டால், மனித உடலில் விஷம் பரவும். இதற்கு செய்யும் பரிகாரமாவது :

(i) கடிபட்ட இடத்தைப் பிடித்து, பிதுக்கி, ரத்தத்தை வெளியேற்றவும். விஷமுட்டி என்றச் செடியின் வேரைக் கொண்டுவந்து, ''முஷி சுவாக'' வென்று நூற்றியொரு தடவை பக்தியோடு ஓதவும். மேலும், அதை அரைத்து நாய் கடித்த இடத்தில் பூசவும். விஷத்தின் பாதிப்பு விட்டோடும்.

(ii) இன்னும், மருந்தாக, நாய்செவியிலை, முள் முருக்கின் பருப்பு இவைகளை சமன் அளவு எடுத்துவந்து தண்ணீரில் அரைத்து, வெதுப்பி, கடிவாயில் பூச விஷம் போகும்.

(iii) மேலும், முருங்கையிலை, தலைப் புண்ணுக்கு இவைகளை சமன் அளவு கொண்டுவந்து, சிறுநீரில் அரைத்துக் கலக்கிக் கொதிப்பித்து நாய் கடிப்பட்ட இடத்தில் பூச விஷம் மாறும்.

(iv) முள்ளு முருங்கை விதை, நரியிலந்தை, அவரி வேர், அறுகம்புல், வெற்றிலை இவைகள் சமன் சேர்த்து கஷாயமிட்டு தினம் இரண்டு தடவை ஆறுநாள் கொடுக்க தீரும்.

## 26. மனித கடிக்கு

மனிதன் மனிதனை கடித்து விடுவதுண்டு. சிலர்கள் கடித்துவிட்டால், அக்கடி விஷமாக மாறி. கடிபட்டவருக்கு பல இன்னல்கள் உண்டாகின்றன. இதற்கு மருந்தாக

வசம்பு, அரளிவேர், சிறுகீரை வேர் இவைகளை பசும்பாலில் அரைத்து கலக்கி, கடிபட்டவருக்கு குடிக்கக் கொடுக்கவும்: மேலும் கடிவாயில் தேக்கவும். இதனால் விஷம் தீரும்.

## 27. கல், முள், கம்பு குத்தினால்

நாம் நடந்துசெல்லுகையில், சில வேளை கல், முள், கம்பு இவைகள் காலில் குத்திவிடுவதுண்டு. இதன் விஷம் சில வேளையில் உடம்பில் பரவும். இதனை நிவிர்த்திக்க மருந்தைப் பார்ப்போம். குழி மீண்டான் என்ற செடியின் சமூலத்தை சிறுநீரில் அல்லது உமிழ்நீரில் அரைத்து வெதுப்பி குத்தின இடத்தில் பூச விஷம் நீங்கும்.

## 28. காணாக் கடிக்கு

நாம் தூங்கும்போது, அல்லது அறியாதிருக்கும்போது, சில விஷப்பிராணிகள் நம்முடலுறுப்பைக் கடித்துவிடுவதுண்டு. (கடிக்கும்போது தெரியாது; கடித்த பிறகே தெரியவரும்.) இக்கடியால் தடிப்பு, நமைச்சல், போன்றவைகள் உண்டாகின்றது. எந்தப் பூச்சிக் கடித்ததுயெனத் தெரியாத காரணத்தால், இதனை காணாக்கடி என்று கூறப்படுகிறது. காணாக்கடியை உதாசீனம் செய்யக்கூடாது. உடனுக்குடன் சிகிச்சையளிப்பது உத்தமம்.

மருந்து

கற்பூரவல்லி இலைகளைக் கொய்து, அதை கசக்கிச் சாறு பிழியவும். வேளைக்கு 50 மி. லிட்டர் வீதம் ஒரு நாளைக்கு நான்கு வேளை கொடுக்கவும். இந்தச் சாற்றை கடிபட்ட தடிப்பான இடத்திலும் தொட்டுப் போடவும். பத்தியமாக புளி, உப்பு, காரம் நல்லெண்ணெய், போகம் இவைகளை இரண்டொரு நாட்கள் அகற்றவும். விஷம் அகலும்.

## 29. கடிவிஷம் முறிய

நாவி, குரங்கு, பூனை, பன்றி, நரி, நீரில் வாழும் முதலை, உடும்பை நாய் போன்றவை மனிதரின்மீது விழுந்து கடித்து

விட்டால், விஷம் உடலில் பரவும். இதனைத் தண்டசெய்து நீக்க, பசுவின் பாலில், நீலி என்ற செடியின் வேரை மை போல் அரைத்துக் கலக்கி, கடிபட்டவருக்கு உள்ளுக்கு மூன்று நாட்கள் கொடுக்கவும். இதனல் கடிவிஷங்கள் கரைந்துவிட்டோடும்.

## 30. கடிவிஷங்களுக்கு பொது மருந்து

எல்லாவிதமான கடிவிஷத்துக்கும், பொது மருந்தொன்றைக் கூறுகிறேன். அவரி வேர், அமுக்கூரம், நல்ல மிளகு வகைக்கு 10 மில்லி கிராம், மூன்று வெற்றிலை இவைகளை எடுத்து அரை லிட்டர் தண்ணீரில் கஷாயமிட்டு, நாலிலொன்ருக வற்றவைத்து கடிவிஷம் கொண்டோருக்குக் குடிக்கக் கொடுக்கவும். இதனல் விஷத்தின் பாதிப்பு அகலும். அனுபவம் கண்டது.

## 31. சில் விஷங்கள் தரிப்புக்கு புகை

மஞ்சளைச் சுட்டு அதிலிருந்து எழும் புகையை, விஷத் தன்மை வாய்ந்த உயிரினங்கள் கடித்த இடத்தில் காட்ட, கடியால் உண்டாகும் தரிப்பு மாறும்.

## 32. மயக்கமுற்ற விஷங்களுக்கு நசியம்

தும்பைச் செடியின் தளிர் இலையும், துளசி இலையும், மிளகும் நன்ருய் கசக்கிப் பிழிந்தெடுத்த சாற்றில் சில துளிகளை விஷத்தின் பாதிப்பால் மயக்கமுற்றவரின் மூக்கில் விடவும். விஷத்தின் கொடுமை நீங்கி, மயக்கம் தெளியும்.

முற்றும்



குருவே துணை

# பன்னிரெண்டு எண்ணிக்கைகளின் நன்மை தீமையை அறிய

1. செப்பிய வொன்றினுக்கு சேதியும் புகலக் கேளு
தப்பிய நால் கால் சீவன் தன்னிறம் செம்மையாகும்
கொப்பென வது வகன்று கிழக்கெனும் மூலே போச்சு
ஒப்புடன் தேடினுலும் உன்கையில் சிக்கிடாதே.

(க-ரை) :— தாங்கள், கூறிய ஒன்றினுக்கு சோதிடப் பலன் கேட்பீர். தங்களே விட்டுப் பிரிந்த நான்கு கால் உயிர், செம்மை நிறமாகும். அதன் கன்று கிழக்கு மூலேக்குப்போய் உள்ளது. நீ எவ்விதமாய் முயன்று தேடினுலும் கையில் வந்து சேராது.

2. வண்ணமாம் ரெண்டினிற்கு வரையுமோர் செய்திகேளீர்
திண்ணமாம் போன சீவன் தானது வெண்மையாகும்
எண்ணிய கிரிகையாகும் யிருந்திடும் மேற்கு திக்கில்
பண்ணவே யதினுல் மெத்த பாகையாம், சத்துருவாலே.

(க-ரை) :— தாங்கள் குறிப்பிட்ட இரண்டாவது எண்ணிக்கையின் சோதிடப் பலனே கேட்பீர். தங்களே, விட்டுப் பிரிந்த உயிரினத்தின் நிறம் வெண்மையாகும். அது போயிருக்கும் திசை மேற்கு யென அறிவீர். அதை அடைய விரும்பும் மார்க்கத்தில், உமக்கு எதிராளியால் அதிகமான பகையுண்டாகும்.

3. கூறிய மூன்றினிற்கு குறிப்பதை யுரைக்கக் கேளீர்
சீறிய சத்துருக்கள் சேர்ந்துன்னை கெடுக்கிறார்கள்
காரியக் கருத்தோனுகும் கண்டிடுமவன் வாழ் திக்கும்
தாரியே கிழக்கதாகும் தடையதா முந்தன் வேலை.

(க-ரை) :— தாங்கள் தூண்டிய இலக்கம் மூன்றிற்குரிய சோதிட பலனை கூற கேட்பீர். கொடிய பகைவர்கள் உன்னோடு சேர்ந்துக்கொண்டு பலவாறு கொடுக்க முனைந்துள்ளார்கள். நீ எவ்வளவு விசால புத்தியுடையவனுக இருப்பினும், எங்கும் உனக்கு கேடாய் இருக்கிறது. கிழக்குத் திசையிலிருக்கும் உன் வேலைக்கு பெரிய தடை உண்டாகும்.

4. புகன்றிடும் நாலினிற்கு பொல்லாங்கு வந்து சேரும்
அகன்றிட வொருவனுலே யானதோர் முயற்சியாகும்
நிகன்றிட வெண்மை யானேன் நிலையது தெற்கேயாகும்
தகன்றிட யவனின் ஜாதி தட்டானென்றறிந்திட்டீரே.

(க-ரை) :— நான்காவது இலக்கத்தைச் சுட்டிக்காட்டிய உமக்கு பெரிய சஞ்சலம் வந்துசேரும் என்பதில் சந்தேகம் வேண்டாம். இந்தத் தொல்லை உன்னைச் சார்ந்த ஒருவரின் முயற்சியால் நீக்கப்பட்டு நிம்மதியடைவாய். அவன் வெள்ளை (சிகப்பு) நிறமுடையவனுகும். அவன் தெற்கு திசையில் குடியிருப்பவன். பொன் வேலையில் ஈடுபட்டவனுக இருப்பான்.

5. தொந்தமா மைந்தினிற்கு துலங்கிய பலனை கேளீர்
பந்தமாம் தீமை போச்சு பலனது தருகலாச்சு
அந்தண ரொருவர் தன்னை அடுத்திட்டால் தெற்குதன்னில்
விந்தையாம் சிவத் தோனுலே வரும் பலனடைந்திடாயே.

(க-ரை) :— ஆசையுடன் தொட்ட ஐந்தாவது எண்ணிக்கையின் பலனை கேட்பீர். இதுவரையிலும் நீங்கள் கொண்ட தொல்லைகளின் பாதிப்பு நீங்கப்பட்டது. இனிமேல் நல்ல பயனுள்ள காரியம் நடக்கும். பிராமண ஜாதியில் உதித்த ஒருவர் தெற்கு திசையில் உள்ளார். அவர் சிகப்பு நிற முடையவர். அவரால் பல நன்மைகள் விளையும்.

6. ஆறென புகன்றதாலே அடுத்திடும் துன்பமொன்று
கோரிய கன்னியாலே குணப்படு மந்தத் துன்பம்
கூறிய நிறங் கறுப்பு கோதை வாளில்லந் தெற்காம்
வீரிய நீதியானென்று விளங்கிடு முலகில் தாமே.

*(க-ரை):— தாங்கள் ஆசையுற்று கூறிய எண்ணிக்கை ஆறின் பலனைக் கூறக் கேட்பீர். தங்களுக்கு விரைவில் துன்பம் வந்து, வரும் கன்னியின் பயனுல் அது நீங்கும். அப் பெண் கறுப்பு நிறமுடையவள். தெற்கு திசையிலிருப்பவள். இதனுல் பல நன்மைகள் உலகில் உமக்குண்டு என்று அறிவீர்.*

7. நண்ணிய வேழினிற்கு நஷ்டமே யொன்றுமில்லை
அண்ணலின் கிருபையாலே யாகிடும் நினைத்தவேலை
எண்ணிய வழக்கு வெல்லும் யேந்தலாம் பிரபுவாலே
புண்ணியம் மிகவேயுண்டு போனது வருகும் பாரே.

*(க-ரை): ஏழாவது இலக்கத்தைக் கூறிய உமக்கு இனி நஷ்டம் ஒன்றும் ஏற்படாது. கடவுள் கிருபையால் நினைத்த வேலை கைகூடும். இன்னும், தொடுத்த வழக்கும் வெல்லும். ஒரு பணக்காரரின் உதவியால் உமக்கு நன்மை பல உண்டாகும். இதனுல் உமக்கு பல புண்ணியங்களும் கிடைக்கும்.*

8. எட்டெனப் புகன்ற தாலே யியம்பிடும் பலனைக் கேளீர்
பட்டிட மனதில் துக்கம் பருகினும் தீமையில்லை
கெட்டியாய் நினைத்தவேலை களிப்புடன் செய்யநன்று
திட்டமாய் வதுவை யொன்று திடீரென முடியும்பாரே.

*(க-ரை):— எட்டென்று கூறிய உமது சோதிடப்பலனை கேட்பீர் கருத்தாக. நீங்கள் இப்போது கொண்டிருக்கும் பல கஷ்டங்களினுல் பாதகம் யாதும் வராது. நினைத்தக் காரியத்தை சந்தோஷமுடன் செய்து வருவீர். திடீரென உமக்கு பல பலன்கள் வந்து சேரும்.*

9. ஒன்பது வந்ததாலே யொரு குறை யுனக்கு மில்லை
தென்புரும் நன்மையேதான் தானது வந்துகூடும்
அன்புரும் போன ஜீவன் அகப்படும் உடனே காண்பாய்
பண்புரும் பாக்கியங்கள் பலித்திடும் நினைத்த வேலை.

(க-ரை) :— ஒன்பதாவது இலக்கத்தைக் கூறிய உமக்கு யாதொரு குறையும் வராது. பல நன்மைகளோடு யாவும் வந்து சேரும். உன்னை விட்டுப் போன ஜீவன் ஒன்று திரும்பும். கண்டு களிப்பாய். நினைத்த பல காரியங்கள் நிச்சயம் நடைபெறும்.

10. பத்தெனப் புகன்ற தாலே பகைபட்டு முழிக்கிருய் நீ
சித்தமா யதுவும் பொல்லா சேதியாய் விளையுதிப்பேர்
நத்திய தொடு வழக்கால் நஷ்டமுனக்கு நேரும்
சுத்தமா யொழிந்து போகும் சீவனை நீ தியானம் செய்யே.

(க-ரை) :— பத்தென்று கூறியதின் பலத்தால் நீ இப் போது பகையின் காரணமாக திணறுகிருய். அந்தக் காரியத் தில் பல கேடுகள் விளையும். நீ இடைந்த வழக்கில் பல நஷ்ட கஷ்டங்களும் வந்து சேரும். கடவுளை தியானம் செய்து வருவீராஞல் உமக்கு கேடு நீங்கி, நலம் பிறக்கும்.

11. நன்றெென பதிஞென்றுக்கு நாடி நீ வந்தவேலை
ஒன்றுமே குறை வில்லாமல் யொருமிக்கப் பலிதமாகும்
கன்றுடன் காலி சேரும் கன்னியும் பெறுவாள் பிள்ளை
சென்றிடும் பயணந் தன்னில் க்ஷேமமே பெருகும் பாரே.

(க-ரை) :— பதிஞென்றுக்கு பலனை கருத்துடன் கேட்பீ ராக. உமக்கு யாதொரு குறையுமில்லாமல், எடுத்த காரியம் பலிதமாகும். தம்பதிகளுள் பாசம் ஏற்பட்டு உன் மனையாள் குழந்தை பெறுவாள். நீ எண்ணிய பிரயாணத்தில் உனக்கு நல்ல லாபமும் கிடைக்கும்.

12. மங்களம் பன்னீரண்டில் மாலேயும் வந்து கூடும்
தங்கியே கேட்ட செய்தி தடையில்லாதின்றேயாகும்
பொங்குமாம் வழக்கு வெல்லும் போனவர் வந்துசேர்வார்
இங்கவை யிதை யறிந்து யீசனே துதி செய்வாயே.

(க-ரை):— பன்னிரெண்டை கூறிய உமது பலனே கேட்பீராக. உமக்கு நல்ல பலன் கிடைக்கும். கல்யாணம் செய்யாதவருக்கு விவாகம் நடக்கும். இதுவரையும் ஆசையுடன் இருந்த உமக்கு நன்மை வந்து சேரும். தொடுத்திருந்த வழக்கு வெல்லும். உன்னே விட்டு பிரிந்தவர் வந்து சேர்வார். நலனே வேண்டி இறைவனே வணங்கி வருவீராக!

சுபம்.


சென்னேமாநகர் மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

உயரத்திலிருந்து விழுதல், அடி, குத்து போன்ற மர்ம பாதிப்பால் உடலில் கேடு உண்டாகின்றன.

உடலின் உயிர் நிலேயங்களில் ஏற்படும் மாற்றத்தை நிவர்த்திக்கும் சிகிச்சை முறை "வர்மாணி மருத்துவம்"

விரைவில், கீழ்க்கண்ட முகவரியில் திறக்க இருக்கிறதை எதிர்பாருங்கள்!

வர்மாணி மருத்துவ மனே,
33/6, கஜபதி நாயுடு தெரு,
ஷெனுய்நகர், சென்னே-30.

டாக்டர். சி. ஆறுமுகம் பிள்ளே.

## இரண்டாவது உலக மகாநாடு பொருட்காட்சியில் ஏட்டு வடிவாய் உலகத் தமிழ் மக்களின் கவனத்தைக் கவர்ந்து இன்று புத்தக வடிவில் கிடைக்கும் சிறந்த தமிழ் (சித்த) மருத்துவ நூல்கள்.

★ ★ ★

சித்தர் குறுநூல் :— எல்லா நோய்களுக்கும் எளிய முறையில், நினைத்த வேளையில் செய்யும் அனுபவ மருந்துகள் அடங்கிய சிறந்த மருத்துவ நூல். (விலை ரூ. 3/-)

குழந்தை மருத்துவம் :— பச்சிளம் குழந்தைகளுக்கு வரும் பல்வேறு நோய்களும், அதைத் தீர்க்கத் தக்கதாய் கைகண்ட மருந்து முறைகளும் நிறைந்தது. இளம் தாய்மார்களுக்கு ஓர் வரப் பிரசாதமாகும். (விலை ரூ. 1/50)

மாதர் மருத்துவம் :— மாதர் நலத்தால் மக்களினம் வாழையடி வாழையாக வாழ்கின்றன. பெண்களின் உடல் நிலையில் உள்ள கேடுகள், அவற்றைப் போக்கும் அரிய முறைகள், அனுபவ மருத்துவ சிறப்புகள் நிறைந்தது. பெண்ணினம் கண்ணென காத்திடும் அரிய ஏடு. (விலை ரூ. 4/-)

மஞ்சளின் மருத்துவ மகிமை :— மஞ்சள் தான் எத்தனை விதங்களில் மனித வாழ்வுக்கு உபகாரப்படுகிறது. மஞ்சளின் மருத்துவ குணத்தை சித்தரிக்கிற சிறந்த கையேடு. (விலை ரூ. 1/-)

மரண கண்டி :— மரணம் யாவருக்கும் பொதுவுடமை. வாத, பித்த, சிலேற்பன பேதத்தால் வந்தடையும் உடல் நலமின்மையை சீரிய முறையில் கூறுகிறது. (விலை ரூ. 1/-)

பசு தரும் ஆரோக்கியம் :— இந்துக்கள் வணங்கும் பசு இனத்தின் உபயோகங்கள் பல. அது மனித வாழ்விற்கு மருத்துவ வகையில் எங்ஙனம் உறுதுணை நல்கின்றது என்பதின் பேரறிவை துலக்குகின்றது. (விலை ரூ. 1/-)

உடலுறுப்பு விளக்கம் :— தம்முடலைப் பற்றி யார்தான் அறிய விரும்புவதில்லை. உடலுறுப்புகளின் விளக்கம், பிரிவு, ஒன்றோடு ஒன்றின் இணைப்பு, தொழில் இவைகளை தெள்ளிய முறையில் பட விளக்கமுடன் சித்தரிக்கிறது. (விலை ரூ. 5/-)

காமாலை நோயும் மருந்தும் :— இந்நோயால் அவதியுற்றோர் எத்தனை? மாண்டோர் எத்தனை? இந்நோயிலிருந்து விடுதலையடைய இன்றே இந்நூல் படியுங்கள். (விலை ரூ. 1/-)

விக்கல் நோயும் மருந்தும்:— விக்கல் ஒரு நோயா? என்று கேட்பார் சிலர். இந்நூல் விக்கலின் பிரிவுகள், அதன் குணங்கள், கொள்ளும் மருந்துகளை வலியுறுத்தும். (விலை ரூ. 1/-)

கருவின் லீலைகள் :— மானிட பிறப்புக்கு ஆண், பெண் கரு எத்தனை உதவுகின்றது. சீரழியும் மக்கள் மேற்கொள்ளும் நோய்கள், அதனுல் நல் நடத்தையின் வழி அவசியங்களை அறிவுறுத்தும் அரிய நூல். (விலை ரூ. 1/-)

படுவர்ம திரட்டு :— உடலில் நிலைத்துள்ள உயிர்நிலைக் காலங்களில் அடி, தட்டு, வெட்டுப்பட்டால் ஏற்படும் சிரமத்தை மாற்றும் மருத்துவம் "வர்மாணி". முக்கியமான வர்மங்கள், படுவர்மம். இவ்விடங்கள் தாக்குண்டால் ஏற்படும் சிரமங்கள், இளக்கு முறைகள், மருத்துவ பாகங்கள் அடங்கிய சிறந்த ஏடு. (விலை ரூ. 5/-)

வர்மாணித் திறவுகோல்:— வர்மத்தால் துயருறும் நோயாளியை இளக்கும் கைமுறை ஏடு. (விலை ரூ. 1/-)

தொடுவர்மத் திறவுகோல் :— வர்ம பிரிவுகளில் தொடு வர்மங்கள் உன்னப் பாலது. இந்நூலில் தொடுவர்மங்களின் பெயர்கள், அதன் இலக்கணம், அவைகளில் இடையூறு ஏற்பட்டால் விளையும் நோய்கள், தடவு முறைகள், மருந்து வகைகளை செவ்வனக் கூறப்படுகின்றன. (விலை ரூ. 1/-)

குழலி நூல் :— மயிரின் இலக்கணம், வகைகள், பல்வேறு நோய்கள், மருந்து வகைகளை ஆராய்ச்சி வகையில் தொகுக்கப் பட்ட அரிய நூல். (விலை ரூ. 2/50)

தொடுவர்ம திரட்டு :— தொடுவர்மங்களின் இடங்கள், அதில் அடி, யிடி படுதலால் ஏற்படும் விபரீதங்கள், இளக்கு முறைகள், இன்னும் மருந்து வகைகளை கருத்தோடு அறிவுறுத்தும் கருவூலம். (விலை ரூ. 5/-)

கொங்கை நோயும் மருந்தும் :— பெண்ணின் மார்பகங்களில் வரும் நோய்களைப் பற்றியும், அதைத் தீர்க்கும் மருத்துவமும் அடங்கியது. (விலை ரூ 1/-)

அகால மரண நூல் :— மர்மச் சாவின் காரண பூர்வத்தை மருத்துவ அறிவால் சிறக்கக்கூறும் அரிய ஏடு. யாவரும் கற்றல் உத்தமம். கொஞ்சம் பிரதிகளே உள. (விலை ரூ. 3/-)

ஐம்பொறி விளக்கம் :— மெய், வாய், கண், மூக்கு, செவி இவைகளின் நிலையங்கள், காக்கும் விதிகள், போன்றவற்றை அருள்மிக்க, பொருள் சிறக்க சித்தரிக்கும் ஏடு. (விலை ரூ. 1/-)

நீர்ப்பாய்ச்சல் நோயும் மருந்தும் :— நீர் பாய்ச்சல் நோய்கள் தான் எத்தனை? வாய், கண், மூக்கு, செவி இவற்றின் அமைப்பு, அவற்றிலிருந்து ஏன் நீர்ப்பாய்ச்சல் நோய் உற்பத்தியாகிறது. அதற்கு மருத்துவ பரிகாரங்களை பகர்கின்றது. (விலை ரூ. 1/-)

கொங்கையின் இரகசியம் :— பெண்களின் குணங்கள் அவரவர் மார்பகங்களின் தன்மையை பொறுத்தது. இந்த இரகசியத்தின் ரசத்தை இந்நூல் சால விளக்குகிறது. இது மங்கையின் பண்பை விளக்கும் ஒரு காவியம். (விலை ரூ. 2/50)

மதுவும் மானிட உடலும் :— மதுவினல் ஏற்படும் கேடுகளை உடல் தத்துவப்படி, விஞ்ஞான பொருள்படி அச்சுறுத்துகிறது. (விலை ரூ. 1/50)

வர்ம தீர்ப்பு :— வர்மத்தால் பாதிக்கப்பட்டவரை குணப் படுத்தும் மருத்துவ கையேடு. (விலை ரூ. 1/-)

வர்மாணி கைமுறை ஏடு :— வர்மமுற்றேரை, இளக்கு முறைப்படி சாதாரணமாக சிகிச்சைச் செய்வது பழக்கம். இந்நூல் மருந்து பிரயோகத்தால், நலனை தேட வழிப் பிறப்பிக்கிறது. மறைமுகமாக வைத்து கையாண்ட இந்நூல், அரிய முறைகளை தாங்கியுள்ளது. அபூர்வமான ஏடு (விலை ரூ. 2 -)

திறிகடுகின் சிறப்பு :— சுக்கு, மிளகு, திற்பிலி இவைகளை திறிகடுகு என்பர். இதன், மருத்துவ நயங்களை மிக விரிவுடன் கூறும் நூல். இதுவரையிலும் வந்தது கிடையாது. மருத் துவர்களுக்கு இன்றியமையாததாகும். (விலை ரூ. 1 -)

கல்லடைப்பு நோயும் மருந்தும் :— கல்லடைப்பு நோயின் காரணங்கள், குறிகள், பாகுபாடுகள், அதற்குரிய அனுபவ மருந்துகள் போன்றவற்றை தெள்ளிய முறையில், அனுபவத் துடன் விளக்குகிறது. (விலை ரூ 1/-)

உயிர் பாதி, உடல் பாதி, உடல் உயிர் பாதி நிலையங்கள் :— வர்ம நூல்கள் கிடைப்பது அரிது. அதிலும் அரிது—அருமை யான நூல் கிடைத்தல். இந்நூல் அவைகளில் ஒன்று. இதில் உடலில், உயிரில், உடல் உயிரில் தழுவிய எண்ணிறைந்த வர்மங்களையும், அதன் இளக்கு முறை, மருந்து வகைகளை யாவரும் வியக்க, கற்றேர் சிறக்கப் பொறிக்கப்பட்டுள்ளன. (விலை ரூ. 10/-)

வர்ம முத்திரை:— வர்ம ஏடுகள் பலதை பலக்கோணங்களில் படித்து பொருட் நலம் பெற திண்டாடும் மருத்துவர்களுக்கு—இது ஒரு கலங்கரை விளக்கு போலாம். கண்டோர் விடார். கற்றோர் கண்ணெனக் காப்பார். (விலை ரூ. 6/-)

ஈட்டு நிதானம்;— உடலில் ஈட்டு ஏற்படுவது பலக் காரணங்களாகும். அதில் இதுகாறும், வெளிப்படையில் சிகிச்சைக்குக் கிட்டாத வார்ம ஈட்டுகளைப்பற்றி தெளிவுற, விளிப்பூட்டும் இந்நூல் ஒப்புயர்வான கருவூலமாகும். (விலை ரூ. 2/-)

குறிப்பு:— (1) ஐந்து புத்தகங்ளுக்கு ஆர்டர் செய்தால் தபால் செலவு இனும்.

(2) புத்தகங்களின் விலையை முன்பணமாக M. O. செய்யவும்.

(3) வி. பி. கிடையாது.

(4) வியாபாரிகளுக்கும், பொது ஸ்தாபனங்களுக்கும் சலுகை உண்டு.

"சித்த மகுட பிரசுரம்"
33/6, கஜபதி நாயுடு தெரு
ஷெனய்நகர், சென்னை-30

---

அறிவிப்பு:— எல்லா புத்தகங்களும், பூச்சு தைலங்களும், ஸ்டால் நிர். 192, தேனம்பேட்டை காங்கிரஸ் பொருள்காட்சி, சென்னை-6-ல் கிடைக்கும்.

முந்துங்கள்! உங்கள் தேவையைப் பூர்த்திச் செய்ய!